விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆவணி - 30 புதன் 15.09.2021 மலர் - 2, இதழ் - 162

# நான் ஹிந்துத்வாவின் சிப்பாய்



விஜயபாரதம்

அமெரிக்காவில் கடந்த 9/11 அன்று நடைபெற்ற ஹிந்துத்துவ எதிர்ப்பு மாநாடு குறித்த கட்டுரையை பிரபல பத்திரிகையாளர் பிரான்சுவா கௌடியர் 'என் பெயர் பிரான்சுவா கௌடியர், நான் ஹிந்துத்துவாவின் சிப்பாய்' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார்.

நான் ஒரு பிரெஞ்சுக்காரன், கத்தோலிக்கனாக பிறந்து வளர்ந்தவன், நான் ஹிந்துத்துவாவின் ஆதரவாளன். நான் ஹிந்துத்துவாவின் சிப்பாய்.

ஹிந்துத்துவா என்றால் என்ன? உலகில் அதிகம் துன்புறுத்தப்பட்ட அதே சமயம் மிகவும் சகிப்புத்தன்மையுடைய, மக்களில் ஒருவராக உள்ள ஹிந்துக்களின் கோட்பாடு, அரசியல், லட்சியவாதம் என்று அதனை கூறலாம். ஒரு எழுத்தாளராகவும், பத்திரிகையாளராகவும் ஹிந்துக்களை நான் பாதுகாக்கிறேன். ஏனென்றால் ஹிந்து மதத்தின் பின்னால், நித்திய ஆன்மீகம் உள்ளது, அது, 'வசுதைவ குடும்பகம்' எனும் உலகளாவிய இயல்புடையது.

இன்று உலகின் இரண்டு பெரிய ஏகத்துவ மதங்கள் தங்கள் கடவுள் மட்டுமே உண்மையானது என்று நம்புகின்றனர். வற்புறுத்தியோ, மிரட்டியோ, நிதி கொடுத்தோ மொத்த மனிதகுலத்தையும் அந்த மதத்திற்கு மாற்றுவதே தங்களின் கடமையாகக் கருதுகின்றனர்.

ஆனால், ஹிந்து மதம் பழங்காலத்திலிருந்து தெய்வீகத்தை மட்டுமே நம்புகிறது. அந்த தெய்வீகம், வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு பெயர்களுடன் வெளிப்படுவதாக நம்புகின்றனர். ஒரு ஹிந்து மசூதி, தேவாலயம், குருத்வாராவில் நுழைய முடியும். அதனை பாவம் என்று அவர்கள் கருதுவது இல்லை. ஆனால், மற்ற மதத்தினர் அப்படி அல்ல.

இதனால்தான், கிறிஸ்தவர்கள், சிரியர்கள், யூதர்கள், பௌத்தர்கள் உட்பட உலகில் துன்புறுத்தப்பட்ட ஒவ்வொரு மத சிறுபான்மையினரும் பாரதத்தில் தஞ்சம் அடைந்தனர்.

நான், ஒரு வெள்ளைக்காரனாக, ஒரு பத்திரிகையாளனாக, ஒரு வெளிநாட்டவனாக, பாரதத்தில் முழு சுதந்திரத்தை அனுபவித்திருக்கிறேன். நான் அரசை விமர்சித்துகூட சுதந்திரமாக எழுத முடியும். ஆனால் மற்ற நாடுகளில்?

ஆகவே, அமெரிக்காவில் ஹிந்து மதத்தை நாசிசத்துடன் ஒப்பிட்டு, ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் நரேந்திர மோடியை, ஹிட்லருடன் ஒப்பிட்டு, ஹிந்து

அமைப்புகளை தலிபான்களுடன் ஒப்பிட்டு அமெரிக்காவில் நடந்த மாநாட்டைப் பார்க்கும்போது அது என் இதயத்தை உடைக்கிறது, கோபப்படுத்துகிறது. இம்மாநாடு உலக வர்த்தக மைய தாக்குதல் அனுசரிப்பு தினத்தில் நடத்தப்பட்டது முற்றிலும் அவதூறானது.

அவர்களின் பிரச்சனை ஹிந்தாலஜி சார்ந்தது. அவர்கள் கிறிஸ்தவ நாகரிகம் உயர்ந்தது என்று நம்புகின்றனர். அதனால் ஹிந்துத்துவாவை சிறுமைப்படுத்த முயற்சிக்கின்றனர். இன்றைய நவீன ஹிந்தாலஜிஸ்டுகள், மேக்ஸ் முல்லரின் அதே விதிமுறைகளை பின்பற்றுகிறார்கள். பாரத தேசத்தவர், ஹிந்துக்கள் தாழ்ந்தவர்கள் என்று தன்னை அறியாமலேயே நம்புகின்றனர்.

நான் பாரதத்தில் 40 வருடங்கள் வாழ்ந்திருக்கிறேன். அங்கு பரந்த அளவில் பயணம் செய்துள்ளேன். சுவாமி விவேகானந்தர், ஸ்ரீ அரவிந்தர் முன்னறிவித்தபடி பாரதம் உலகின் ஆன்மீகத் தலைவராக மட்டும் மாறாது. அது பொருளாதார, அரசியல், ராணுவ, புவிசார் அரசியல் வல்லரசாகவும், மேற்கத்திய நாடுகளின் சிறந்த நட்பு நாடாகவும் மாறும் என்பது எனது நம்பிக்கை. ஏனெனில் அது சீனாவை போல அல்ல. பாரதம், அதன் ஆன்மீகத்தை இன்றும் உயிர்ப்போடு வைத்துள்ளது.

இது சனாதன தர்மம், இது நித்திய மதம், இது உங்களுக்கு முன்பே தெரியாது, ஆனால் நான் இப்போது உங்களுக்கு வெளிப்படுத்தியுள்ளேன். எனவே, நீங்கள் விரும்பினால் என்னை ஹிந்துத்துவாவின் சிப்பாய் என்று அழைக்கலாம்.

# பண்டைய ராணுவ உத்தி கல்வி



விஜயபாரதம்

பனாரஸ் ஹிந்து பல்கலைக்கழகம், இந்த ஆண்டு, பாரதத்தில் முதல் முறையாக ‘வேத இலக்கியத்தில் ராணுவ அறிவியல் மற்றும் ராணுவ உத்திகள்’ என்ற எம்.ஏ படிப்பை அறிமுகப்படுத்தியுள்ளது. பாரதத்தின் பண்டைய நூல்களில் உள்ள அக்கால போர் முறைகள், அரசியல், நிர்வாகம், வியூக்லம் உள்ளிட்ட ஏராளமான குறிப்புகள் உள்ளன. அதனை இக்காலத்திற்கு ஏற்ப நாம் பயன்படுத்த முடியும். இத்திட்டத்தில் மாணவர்கள், வசிஷ்டரின் 'தனுர்வேத சம்ஹிதா' மற்றும் வைஷம்பாயனின் 'நீதி பிரகாஷிகா' ஆகிய இரண்டு முக்கிய புத்தகங்களைப் படிப்பார்கள். இவை இரண்டும் ராணுவ மூலோபாயத்தை போதிக்கின்றன. இந்தாண்டு, 2 ஆண்டுகள் எம்.ஏ படிப்பில் முதல் தொகுதியில் 40 மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள். நமது ராணுவமும் நமது அக்கால போர் முறைகள் குறித்து ராணுவத்தில் கற்றுத்தர முடிவெடுத்துள்ளது. சீனாவும் தனது பண்டைய போர் முறைகளை நவீனப்படுத்தி பயன்படுத்துவதாக அதன் ராணுவ உயர் அதிகாரி தெரிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வெள்ளை அறிக்கை வெளியிடுமா தி.மு.க ?



விஜயபாரதம்

தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை, தமிழகத்தில் கடந்த 2019ல் 1,017 மாணவர்கள் நீட் தேர்வு எழுதினர். 2020ல், 17 ஆயிரம் பேர் எழுதினர். கடந்த, 2019ல் 44 சதவீதமாக இருந்த தேர்ச்சி விகிதம், 2020ல் 57.44 சதவீதமாக உயர்ந்தது. நீட் தேர்வுக்கு எதிராக செயல்பட்டு வரும் முதல்வர் ஸ்டாலின், நீட் தேர்வுக்கு முன்பாக அரசு பள்ளி மாணவர்கள் மருத்துவக் கல்லூரிகளில் அதிகம் சேர்ந்தனரா இல்லை இப்போது அதிகம் சேர்ந்தனரா என்பதை தெளிவுபடுத்த வேண்டும். இது தொடர்பாக, 2006 முதல் 2015 வரையிலான விவரங்களை வெள்ளை அறிக்கையாக வெளியிட வேண்டும். மேலும், அந்த அறிக்கையில், தி.மு.கவைச் சேர்ந்த எத்தனை பேர் மருத்துவக் கல்லூரிகள் நடத்துகின்றனர். அதில், எத்தனை மாணவர்களை நிர்வாக ஒதுக்கீட்டில் சேர்த்துள்ளனர் என்பதையும் தெரிவிக்க வேண்டும். சேலம் மாணவர் தனுஷ் இறப்புக்கு தி.மு.கதான் முழு பொறுப்பு. எனவே, நீட் தேர்வில் இருந்து விலக்கு பெறுவோம் என பொய்யாக வாக்குறுதியளித்த தி.மு.க தலைவர்கள் மீது, டி.ஜி.பி வழக்குப் பதிவு செய்ய வேண்டும்' என்று கூறினார்.

# இந்த நிழற்குடைக்கா ரூ. 1.54 கோடி ?

தூத்துக்குடி மாநகராட்சி ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் தி.மு.க கனிமொழியின் எம்.பி நிதியை பயன்படுத்தி பேருந்து நிழற்குடை ஒன்று சமீபத்தில் அமைக்கப்பட்டு, கடந்த 5ம் தேதி திறந்து வைக்கப்பட்டது. அதன் அருகே செலவான தொகை குறித்த கல்வெட்டும் அமைக்கப்பட்டது. அதில், அந்த நிழற்குடை அமைக்க ரூ.1.54 கோடி செலவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது. இது குறித்து பா.ஜ.க நிர்வாகி காயத்ரி ரகுராம், தனது அறிக்கையில், 'இந்த நிழற்குடை அமைக்க ரூ.1.54 கோடி செலவாகுமா?' என்று கனிமொழிக்கு கேள்வி எழுப்பியுள்ளார். பொதுமக்களோ, 3 பெட்ரூம் கொண்ட ஒரு பிளாட் வாங்கினாலே ஒரு கோடி தாண்டாது எனும்போது, 4 தகர ஷீட்டு, 4 ஸ்டீல் பைப்பு, 2 லைட்டு, ஒருசின்ன பிளாட்பார்ம் போட 1.54 கோடியா? ஒரு நியாயம் வேண்டாமா? என்றெல்லாம் கனிமொழியிடம் கேட்கின்றனர். பதில் அளிப்பாரா கனிமொழி?

விஜயபாரதம்





விஜயபாரதம்

# அயோத்தியில் ஆறு கோயில்கள்


ஸ்ரீராம ஜென்மபூமி அறக்கட்டளையை சேர்ந்த டாக்டர் அனில் மிஸ்ரா, ஒரு செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில், ஸ்ரீராம ஜென்ம பூமியில் அமைய உள்ள பிரம்மாண்டமான ஸ்ரீ ராமரின் கோயிலின் வெளி பிரகாரத்தில், சூரியன், விநாயகர், சிவன், துர்கை, விஷ்ணு, பிரம்மா உள்ளிட்ட ஆறு தெய்வங்களுக்காக தனித்தனியாக ஆறு கோயில்கள் கட்டப்படும். வரும் நவம்பர் முதல் வாரத்தில் ராமர் கோயிலின் அடித்தளத்தை நிர்மாணிக்கும் பணி துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என கூறினார்.

# தரமான சம்பவம்

மன்னார்குடி நகர தி.மு.க இளைஞரணி செயலர் சுதாகர், தி.மு.க விவசாய தொழிலாளர் அணி நகர அமைப்பாளர் பாண்டவர், தி.மு.க மாணவரணி நகர துணைச் செயலர் முருகேசன் உள்ளிட்ட எட்டு பேர், தஞ்சாவூர் அடுத்த சூரக்கோட்டையில் உள்ள ஆற்றில் குளித்துவிட்டு ஒரு பேக்கரியில் டீ குடித்தனர். அருகில் உள்ள பெட்டிக்கடையில் சிகரெட் கேட்டு தகராறு செய்ததுடன் கடையில் இருந்த பெண்ணிடம் ஆபாசமாக பேசி துப்பட்டாவை பிடித்து இழுத்துள்ளனர். இதை தட்டிக் கேட்ட கடையில் இருந்தவர்களை கடுமையாக தாக்கியுள்ளனர். பேக்கரியையும் அடித்தும் நொறுக்கினர் தி.மு.கவினர். இதனை அறிந்து அங்கு வந்த கிராம மக்கள், தி.மு.க.,வினரை மடக்கிப் பிடித்தனர். அதில் இருவர் தப்பிவிட, மாட்டிய சுதாகர், பாண்டவர், முருகேசன் உட்பட ஆறு பேரை நன்றாக அடித்துத் துவைத்தனர். படுகாயம் அடைந்த தி.மு.கவினரை காவலர்கள் வந்து மீட்டுச் சென்று தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதித்தனர். பின்னர், தி.மு.க பிரமுகர்கள் மீது வழக்குப் பதிவு செய்தனர்.

விஜயபாரதம்





விஜயபாரதம்

# பிரிட்டிஷ் அகாடமிக்குத் தேர்வு

பாரத வம்சாவளியைச் சேர்ந்த எழுத்தாளர் மஹ்மூத் மம்தானி, உலகளாவிய கலாச்சார புரிதலுக்கான 2021 பிரிட்டிஷ் அகாடமி புத்தகப் பரிசுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இதில் உலகெங்கிலும் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 4 எழுத்தாளர்களில் இவரும் ஒருவர். 75 வயதான மஹ்மூத், மும்பையில் பிறந்த உகாண்டா கல்வியாளரும் எழுத்தாளரும் ஆவார். இந்த இறுதிப்பட்டியலில், இலங்கையில் பிறந்த கேம்பிரிட்ஜ் வரலாற்றாசிரியர் சுஜித் சிவசுந்தரம், ஸ்காட்லாந்தை சேர்ந்த கால் ஃப்ளைன் ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.


# ஆன்லைனில் இலவச டோக்கன்



விஜயபாரதம்

இலவச தரிசன டோக்கன்களை திருப்பதியில் உள்ள கவுண்டர்களில் வழங்கினால் அவற்றை வாங்க கூடும் பக்தர்களின் கூட்டத்தால் கொரோனா பரவலாம் என்பதால் இலவச தரிசன டோக்கன் வழங்கும் நடைமுறை கடந்த சில மாதங்களாக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது. இந்நிலையில் கடந்த மூன்று நாட்களாக சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த பக்தர்களுக்கு மட்டும் நாள் ஒன்றுக்கு 2,000 இலவச தரிசன டோக்கன்கள் வழங்கப்படுகின்றன. ஏராளமான பக்தர்களின் கோரிக்கையை அடுத்து, 300 ரூபாய் தரிசன டிக்கெட்டுகளை போலவே, இலவச தரிசன டோக்கன்களையும் ஆன்லைனில் பக்தர்களுக்கு வெளியிட முடிவு செய்து அதற்கான ஏற்பாடுகளை துவக்கப்பட்டு உள்ளது. இன்னும் ஒரே வாரத்தில் இலவச தரிசன டோக்கன்கள் ஆன்லைன் வழியாக பக்தர்களுக்கு கிடைக்கும் என்று திருமலை திருப்பதி தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

# கோயில் பூஜாரி அடித்துக் கொலை



விஜயபாரதம்

மத்தியப் பிரதேசத்தின் தார் மாவட்டத்தின் ஞானபுரா கிராமத்தில் உள்ள ஒரு அனுமன் கோயிலின் வளாகத்திற்கு வெளியே சில அடையாளம் தெரியாத மர்ம நபர்கள் சுற்றித் திரிந்தனர். கோயிலுக்குள் தங்கி இருந்த அக்கோயிலின் பூஜாரி, அருந்தாஸ், ஏன் கோவிலுக்கு வெளியே அலைகிறீர்கள் என்று கேட்டார். இதனையடுத்து அவர்கள் பூஜாரியை கற்களாலும் கட்டைகளாலும் கடுமையாகத் தாக்கினர். தடுக்க வந்த காவலாளியையும் தாக்கிவிட்டு தப்பிவிட்டனர். இதனையடுத்து படுகாயமடைந்த பூஜாரியை ஊர் மக்கள் உதவியுடன் மருத்துவமனையில் சேர்த்தார் காவலாளி. ஆனால், சிகிச்சை பலனின்றி பூஜாரி உயிரிழந்தார். துணை காவல் கண்காணிப்பாளர் (டி.எஸ்.பி) மோனிகா சிங் தலைமையில் காவல்துறையினர் இந்த சம்பவம் குறித்து வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# அக்னி 5 ஏவுகணை சோதனை

அணு ஆயுத திறன் கொண்ட, 5,000 கிமீ தூரம் பயணிக்கும், கண்டம் விட்டு கண்டம் பாயும் அக்னி 5 ஏவுகணை (ஐ.சி.பி.எம்) அதன் முதல் பயனர் சோதனையை இந்த மாத இறுதிக்குள் பரிசோதிக்க உள்ளது. முக்கியமாக இந்த ஏவுகணை பல இலக்குகளை தாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு உள்ளது என்பது இதன் சிறப்பு. சோதனைகளுக்கு பிறகு அக்னி 5 விரைவில் ஆயுதப் படையில் அறிமுகப்படுத்தப்படும். இதற்காக ஒடிசா கடற்கரையில் உள்ள ஒரு பாதுகாப்பு ஆய்வு மையத்தில் விரிவான தயாரிப்புகள் தொடங்கியுள்ளன. 2018ல் நடைபெற்ற அக்னி 5ன் ஆரம்பக்கட்ட சோதனைகளுக்குப் பிறகு 2020ல் படையில் சேர்க்க திட்டமிடப்பட்டது. கொரோனா காரணமாக இது தள்ளிப்போனது. டி.ஆர்.டி.ஓ உருவாக்கிய இந்த ஏவுகணை ஆசிய நாடுகளின் அனைத்துப் பகுதிகள், ஆப்பிரிக்கா, ஐரோப்பாவின் சில பகுதிகளில் உள்ள இலக்குகளை தாக்கும் திறன் கொண்டது. அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா, சீனா, பிரான்ஸ், இஸ்ரேல், வட கொரியாவுக்கு பிறகு கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை வைத்திருக்கும் 8வது நாடு பாரதம்.

விஜயபாரதம்



# மகளிர் ஸ்பெஷல்

மின்சார ஸ்கூட்டர் தயாரிப்பு நிறுவனமான ஓலாவின் இணை நிறுவனர் பாவிஷ் அகர்வால் தனது டுவிட்டர் பக்கத்தில், 'தற்சார்பு பாரதம் திட்டமான ஆத்மநிர்பார் பாரத் திட்டத்திற்கு பெண்களின் பங்களிப்புத் தேவை. ஓலா ப்யூச்சர் தொழிற்சாலை, முழுக்க முழுக்க பெண்களால் நடத்தப்படும். இது முழுவதும் பெண்களால் நடத்தப்படும் உலகின் மிகப்பெரிய தொழிற்சாலையாக இருக்கும். பெண்களுக்கு பொருளாதார வாய்ப்புகளை வழங்குவது அவர்களின் வாழ்க்கையை மட்டுமல்ல, அவர்களின் குடும்பம், சமூகத்தின் வாழ்க்கையை மேம்படுத்தும்' எனப் பதிவிட்டுள்ளார். இதன்படி அங்கு 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்களுக்கு வேலை வழங்கப்படும் என தெரிகிறது.

விஜயபாரதம்



# வெளிநாட்டு நன்கொடைக்குத் தடை

அரசு சாரா தொண்டு அமைப்புகள் வெளிநாட்டு நன்கொடைகளை பெறுவதற்கு எப்.சி.ஆர்.ஏ உரிமம் கட்டாயம். மதமாற்றம், நிதி முறைகேடு, தவறான கணக்குத் தாக்கல், வருமான கணக்குத் தாக்கல் செய்யாமல் இருப்பது உள்ளிட்ட காரணங்களால், கிறிஸ்தவ தொண்டு நிறுவனங்கள், முஸ்லிம் அறக்கட்டளைகள் உள்ளிட்ட 6 அமைப்புகளுக்கான எப்.சி.ஆர்.ஏ உரிமம் 180 நாட்களுக்கு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இந்த ஆண்டு எப்.சி.ஆர்.ஏ., உரிமம் நிறுத்திவைக்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 9 ஆக உயர்ந்துள்ளது.



விஜயபாரதம்

# கேரள ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள்

மத்திய உளவுத்துறையின் அறிக்கையில், 'ஆப்கன் சிறையில் இருந்த கேரளாவை சேர்ந்த 25 ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகள் விடுவிக்கப்பட்டு உள்ளனர். தேசிய புலனாய்வு முகமை இந்த பயங்கரவாதிகள் பட்டியலில் உள்ள 25 பேரும் மீண்டும் நாடு திரும்பலாம் என தெரிவித்துள்ளது. இதனால் நாட்டிற்கு அச்சுறுத்தல்கள் ஏற்படலாம். எனவே, இப்பிரச்னையில் மத்திய, மாநில அரசுகள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். ஏற்கனவே, சர்வதேச விமானங்கள் கண்காணிப்பில் உள்ளன. சர்வதேச எல்லைகள், கடலோர பகுதிகளில் கண்காணிப்பை பலப்படுத்த வேண்டும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


விஜயபாரதம்

# தொழில் துறைக்கு கைகொடுப்போம்



விஜயபாரதம்

சி.ஐ.ஐ எனப்படும் இந்திய தொழில் கூட்டமைப்பு, இந்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை கூட்டமைப்பு நிர்வாகிகளுடன் கலந்துரையாடிய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், 'தொழில் துறை, நிறுவனங்களுக்கு ஏற்படும் பிரச்னைகளுக்கு உடனடியாக தீர்வு காணப்படும். கடன்களுக்கான வட்டி குறைப்பு, நிறுவனங்களுக்கான ஊக்கத்தொகைகளுக்காக அடுத்த பட்ஜெட் வரை காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. நிறுவனங்களுக்கு எப்போது எது தேவையோ, அவை உடனடியாக செய்து தரப்படும்.

தொழில் நிறுவனங்களுக்கு தேவையான கடன் வசதிகள் குறித்த நேரத்தில் சரியாக கிடைக்கவில்லை என, கடந்த முறை புகார்கள் வந்தன. ஆனால், தற்போது அப்படி எந்த கருத்தும் வரவில்லை. இது வரவேற்கத்தக்கது' என தெரிவித்தார்.

# ஜிஹாதி முயற்சியா?

இத்தாலியின் ரிமினி நகரில் உள்ள ஒரு புலம்பெயர்ந்தோருக்கான காப்பகத்தில் வசிக்கும் சோமாலிய நபர் ஒருவர், போதை பொருளை உட்கொண்டிருந்த நிலையில் கடந்த சனிக்கிழமை அன்று ஒரு பேருந்தில் டிக்கெட் இல்லாமல் பயணத்தார். டிக்கெட் பரிசோதனைக்கு வந்தபோது, அவர் திடீரென இரண்டு டிக்கெட் பரிசோதகர்கள், 6 வயது சிறுவன், 4 பெண்களை கத்தியால் குத்திவிட்டு தப்பித்தார். காவலர்கள் அவரை கைது செய்து, இது ஜிஹாதி கொலை முயற்சியா என விசாரித்து வருகின்றனர். முன்னதாக அந்த நபர், 2015ல் ஐரோப்பாவிற்கு வந்தார். அவரின் அகதி கோரிக்கையை டென்மார்க், சுவீடன், ஜெர்மனி, இத்தாலி, நெதர்லாந்து போன்ற ஐரோப்பிய நாடுகள் மறுத்திருந்தன. இத்தாலிய உள்துறை அமைச்சர் லமோர்ஜெஸ் இதனை "மிகவும் மோசமான நிகழ்வு" என்று குறிப்பிட்டார். சட்டவிரோதமாக குடியேறியவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கக் வலதுசாரி தலைவர் மேட்டியோ சால்வினி லமோர்ஜீஸின் கோரியுள்ளார்.



விஜயபாரதம்

# வளம் பெறும் காமாக்யா கோயில்

வடகிழக்கு மாநிலங்களின் 2 நாள் சுற்றுலா, கலாச்சார அமைச்சர்கள் மாநாடு அசாம் மாநிலம், கௌஹாத்தியில் நடைபெற்றது. இதில் பேசிய மத்திய சுற்றுலா, கலாச்சாரத்துறை அமைச்சர் கிஷன் ரெட்டி, ‘சுற்றுலா அமைச்சகம் அதன் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களான ‘ஸ்வதேஷ் தர்ஷன்’ மற்றும் பிரசாத் திட்டங்களின் கீழ், வடகிழக்கு மாநிலங்களில் சுற்றுலா தல உட்கட்டமைப்பை மேம்படுத்த நிதி உதவி வழங்கும். இதற்காக கண்டறியப்பட்ட ஆறு திட்டங்களுக்கு ரூ. 193.61 கோடி ரூபாய் செலவிடப்படும். காமக்யா கோயில் வளர்ச்சிக்கு ரூ. 29.99 கோடி ஒதுக்கப்படும் என தெரிவித்தார். அசாம் மாநிலத்தில் உள்ள காமாக்யா கோயில், 51 சக்தி பீடங்களில் ஒன்று. இது, தச மகா வித்யா தேவிகளின் கோயில்களில் பிரதான கோயிலாகவும் உள்ளது.

விஜயபாரதம்



# பாரதம் சிங்கப்பூர் பணப் பறிமாற்றம்



விஜயபாரதம்

பாரதத்தின் ஒருங்கிணைந்த பணப்பரிமாற்ற செயலி யு.பி.ஐ மற்றும் சிங்கப்பூரின் 'பே நவ்' ஆகியவற்றை இணைக்கும் திட்டம் வரும் ஜூலை 2022 க்குள் செயல்பாட்டுக்கு கொண்டுவர இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், அலைபேசி எண்களை கொண்டு பாரதம், சிங்கப்பூருக்கு இடையே மெய்நிகர் கட்டண முகவரிகளை (VPA) பயன்படுத்தி எளிதாக நிதி பரிமாற்றங்களைச் செய்துகொள்ளலாம். இது உள்நாட்டு பணப் பரிமாற்றத்தைப் போன்றே எளிதாக்கப்படும். மிக வேகமாகவும் பணப்பரிமாற்றம் செய்ய முடியும். உலகெங்கிலும் கிட்டத்தட்ட 250 மில்லியன் மக்கள் ஆண்டுதோறும் 500 பில்லியன் டாலர் எல்லை தாண்டிய பணம் பரிமாற்றம் செய்கின்றனர். ஆனால் இதற்கான பரிமாற்றக் கட்டணம் அதிகம். அந்த கட்டண சிக்கலை இது குறைக்கும்.

# வலையில் சிக்கிய மீம்கள்



# மாவீரன் செண்பகராமன் பிள்ளை



விஜயபாரதம்

தென்னாட்டு போஸ் என்றும், ஒவ்வொரு பாரதியனின் உள்ளத்தையும் கிளர்ந்தெழச் செய்யும் 'ஜெய்ஹிந்த்' என்னும் கோஷத்தின் தந்தையாகவும் போற்றப்படுபவர் மாவீரன் செண்பகராமன். பாரதத்தை அடிமைப்படுத்திய வெள்ளை ஏகாதிபத்தியத்தை நடுநடுங்க வைத்தவர்களில் செண்பகராமன் முக்கியமானவர். 1914, முதல் உலக போர் நடந்த காலம் அது. அப்போது செப்டம்பர் 24ல் சென்னையில் திடீரென்று மூன்று குண்டுகள் வீசப்பட்டன. சென்னை துறைமுகம், செயிண்ட் ஜார்ஜ் கோட்டை, உயர்நீதிமன்றம் என மூன்று இடங்களில் குண்டுகள் வீசப்பட்டன. இவை கடல் வழியே எம்டன் என்ற ஜெர்மானிய கப்பல் மூலம் வந்தவை. இந்த நீர்மூழ்கிக் கப்பலை இயக்கிய வழிகாட்டி செண்பகராமன்.

குழந்தை பிராயத்திலே செண்பகராமன் நாட்டுப்பற்றுடன் இருந்தார். தனது 15ம் வயதில் ஜெர்மானிய உளவு அதிகாரி சர் வில்லியம் ஸ்ட்ரிக்லாண்ட் துணையுடன் இலங்கை சென்றார். அங்கிருந்து இத்தாலி பயணமானார். இத்தாலி மொழியில் இலக்கியமும், அறிவியலும் கற்றார். பின்னர் ஜெர்மனி சென்றார். பொறியியல் பயின்று முனைவர் பட்டம் பெற்றார். ஜெர்மனியின் அதிபர் கெய்சர் செண்பகராமனின் அறிவுத் திறனால் ஈர்க்கப்பட்டார்.

செண்பகராமன், இந்திய விடுதலையை வலுப்படுத்த இந்திய ஆதரவு சர்வதேச அமைப்பை உருவாக்கி அதன் தலைவரானார். வியன்னாவில் நடந்த ஒரு மாநாட்டில் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸை சந்தித்தார் செண்பகராமன். அப்போதுதான் 'ஜெய்ஹிந்த்' என்ற வார்த்தையை நேதாஜியிடம் செண்பகராமன் பயன்படுத்தினார். அந்த வார்த்தை பின்னாளில் பாரதத்தின் தாரக மந்திரமானது.

செண்பகராமன் தன் வாழ்நாளில் சந்தித்த இரு பெரும் ஆளுமைகள் லெனினும், ஹிட்லரும். சோவியத் ரஷ்ய புரட்சியை நடத்திய லெனின் உலகின் வெவ்வேறு விடுதலை இயக்கங்களோடு தொடர்புகொண்டு ஆதரவு தந்தார். இதற்கு பிறகு செண்பகராமன் முதல் சுதந்திர அரசை காபூலில் அமைத்தார். ஒருமுறை ஹிட்லர் இந்தியர்கள் சுதந்திரம் பெறுவதற்கு தகுதியானவர்கள் அல்ல என்று இழிவாக பேசினார். இதைக் கேட்டு கொதித்தெழுந்த செண்பகராமன், ஹிட்லரை எதிர்த்து பேசி நமது பாரம்பரிய சிறப்புகளை விளக்கி ஹிட்லரை மன்னிப்பு கேட்க வைத்தார்.

இச்சம்பவம் நாஜிக்களுக்கு கொதிப்பூட்டியது. ஒரு விருந்தில் செண்பகராமனின் உணவில் மெல்ல கொல்லும் விஷத்தை கலந்துவிட்டனர். 26519 34ல் தனது மனைவி லட்சுமிபாய் மடியில் அவர் உயிர் பிரிந்தது. சாகும் தருவாயில் தன் மனைவியிடம், தான் இறந்த பிறகும் அவர் மனைவி பாரத சுதந்திர போராட்டத்தில் ஈடுபட வேண்டும். தனது சாம்பலை கரமனை ஆற்றில் கரைக்க வேண்டும் என்ற இரு கோரிக்கைகள் வைத்தார்.

# மோக்ஷகுண்டம் விஸ்வேஸ்வரய்யா




விஜயபாரதம்

'கிருஷ்ணராஜ சாகர் அணையின் சிற்பி' என கருதப்படும் எம். விஸ்வேஸ்வரய்யா ஒரு புகழ்பெற்ற இந்தியப் பொறியாளர். இவர் எடுத்துக்கொண்ட காரியத்தில் முதன்மையாக இருக்க வேண்டும் என்ற விடாமுயற்சி உடையவர்., வேளாண்மையில் புதுமை, தானியங்கி மதகைக் கண்டுபிடித்த மாபெரும் வல்லுநர்.

1860 செப்டம்பர் 15ல் கர்நாடக மாநிலத்தின் சிங்கபல்லபுரா மாவட்டத்திலுள்ள முட்டனஹள்ளி என்ற கிராமத்தில் சீனிவாச சாஸ்திரிக்கும், வெங்கடலக்ஷ்மி அம்மாவுக்கும் மகனாக பிறந்தார். பதினைந்து வயதில் தந்தையை இழந்த விஸ்வேஸ்வரய்யா, தன்னுடைய ஆரம்ப கல்வியை சிங்கபல்லபுராவிலும், உயர் கல்வியை பெங்களூரிலும் பயின்றார். 1881ல் இளங்கலைப் பட்டப் படிப்பை சென்னை பல்கலைக்கழகத்தில் முடித்த அவர், பின்னர் தன்னுடைய கட்டடப் பொறியியல் கல்வியை "புனே அறிவியல் கல்லூரியில்" முடித்தார்.

படிப்பை முடித்த பிறகு, மும்பை பொதுப் பணித்துறையில் ஒரு பொறியாளராக வேலைக்கு சேர்ந்தார். பின்னர், 'இந்திய பாசன ஆணையத்தில்' பணியைத் தொடங்கிய அவர், தானியங்கி வெள்ளமடை மதகை வடிவமைத்து, 1903ல் புனேவிலுள்ள 'கடக்வசல' நீர்தேக்கத்திலும் அதை செயல்படுத்தி வெற்றி கண்டார். ஆசியாவிலேயே மிகப்பெரிய நீர்தேக்க அணைகளில் ஒன்றாக கருதப்படும் 'கிருஷ்ணராஜ சாகர் அணையை' காவிரியின் குறுக்கே உருவாக்கி பெரும் புகழ்பெற்றார். இது மட்டுமல்லாமல், திருப்பதியில் இருந்து திருமலைக்கு சாலை, மைசூருக்கு அருகிலுள்ள சிவசமுத்திரத்தில் நீர் மின் உற்பத்தி ஆலை உள்ளிட்டவை அமைக்கவும் உறுதுணையாக இருந்தார்.

1912ல் மைசூர் அரசின் திவானாக நியமிக்கப்பட்ட அவர், மாநில கல்வி மற்றும் தொழில்துறை வளர்ச்சிக்கு அயராது உழைத்தார். ஸ்ரீ ஜெயசாமராஜெந்திரா பாலிடெக்னிக், மைசூர் பல்கலைக்கழகம், சாண்டல் எண்ணை நிறுவனம், உலோக தொழிற்சாலை, குரோமிய வழி பதனிடுதல் தொழிற்சாலை, பத்ராவதி இரும்பு மற்றும் ஸ்டீல் தொழிற்சாலை, கர்நாடக சோப் மற்றும் டிடர்ஜென்ட் நிறுவனம், பெங்களூரு அரசு பொறியியல் கல்லூரி என பல நிறுவனங்கள் உருவாகக் காரணமாக இருந்தார்.

1918ல் திவான் பொறுப்பிலிருந்து ஓய்வு பெற்றார். தன்னுடைய ஓய்வுக்குப் பிறகும் கடுமையாக உழைத்தார். நூறு வயத்திற்கும் மேல் அயராது பாடுபட்ட எம். விஸ்வேஸ்வரய்யா 1962 ஏப்ரல் 14 அன்று தன்னுடைய 101வது வயதில் காலமானார். இவரது அளப்பரிய சேவைகளை பாராட்டி பாரதத்தின் மிக உயரிய விருதான "பாரத ரத்னா" விருது மத்திய அரசால் வழங்கி கௌரவிக்கப்பட்டது.